3th November 1966]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த யோசனையும், இந்த யோசனை யின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற சட்டமும் ஒரு தனிப்பட்ட மதத்தினரை, அதாவது முஸ்லீம் மதத்தினரைப் பாதிப்பதாக இருக்கிற காரணத்தினால், முஸ்லீம் பிரமுகர்களை நமது அரசாங்கம் யோசனை கேட்டதா? அப்படிக் கேட்காமல் ஹைகோர்டு, கவர்ன்மெண்டு ப்ளீடர், பார் கவுன்சில் முதலி யோர்களை யோசனை கேட்பதில் என்ன பிரயோசனம்? இது ஒரு குறிப்பிட்ட மதத்தினருடைய சுதந்திரத்தைப் பறிப்பதன் காரண மாக முஸ்லீம் பிரமுகர்களை அரசாங்கம் யோசனை கேட்டதா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Among the Muslims also, opinion is divided on this point. Many of them are not in favour of abolition.

**கனம் சபாநாயகர் :** முஸ்லீம் பிரமுகர்களை அரசாங்கம் யோசனை கேட்டதா என்று தான் அங்கத்தினர் கேட்கிறார்கள். மற்ற விவரத்தை அடுத்த கேள்வி கேட்கும்போது கொடுக்கலாமே ?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** கேட்டது.

### சேமநிதி

* 501 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : } கனம் முதல்
திரு. ஆ. தங்கவேலு :

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) யுத்தகால கட்டாய சேமிப்பு நிதியாக சர்க்கார் சிப்பந்திகளிடம் வசூலான தொகை எவ்வளவு?

(இ) அத்தொகையைத் திரும்பக் கொடுத்துவிடும்படி சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்களா ?

(உ) அத்தொகை முழுமையும் திரும்பக் கொடுக்கப்பட்டு விட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) The total amount collected as compulsory deductions from the Government servants towards emergency fund is estimated at Rs. 3.42 crores.

(b) The Government have ordered the amounts to be merged with normal Provident Fund accumulations of the Government servants concerned.

(c) Does not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அந்தப் பணத்தை பிராவி டெண்டு பண்டோடு சேர்த்துக்கொள்வதற்கு அவர்களுடைய சம்மதம் பெறப்பட்டதா? அவர்களுடைய திருப்தியுடன் இது நடந்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்தப் பணம் பிராவிடெண்டு பண்டோடு சேர்ந்திருக்கிறது. அது அவர்களுடைய பிராவி டெண்டு பண்டு. அதை மெர்ஜ் பண்ணுவதற்கு அவர்களுடைய

[8th November 1966

சம்மதம் ஒன்றும் வேண்டியதில்லை. யாரும் அதைத் தங்களுக்கு வேண்டாம் என்று சொல்லமாட்டார்கள், யாரும் மறுக்க மாட்டார்கள்.

**திரு. ஆ. தங்கவேலு :** இப்பொழுது இருக்கக்கூடிய கஷ்ட நிலையை உத்தேசித்து எமெர்ஜென்ஸி ப்ராவிடெண்டு பணம் பிடித்ததை அவர்களுக்கு நேரடியாகக் கொடுப்பதற்கு முயற்சிப் பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு நேரடியாகக் கொடுப்பது அவர்களுக்கே நல்லது அல்ல.

படை வீரர்கள்

* 502 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

சீனு, பாகிஸ்தான் போரில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ராணுவ வீரர்களில் காலமானவர்கள், அங்கஹீனமானவர்கள் முறையே எத்தனை பேர்கள், மாவட்ட வாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Communications furnishing particulars of the service personnel who are killed/ wounded/missing are received from Army Headquarters and from Army Record Offices by the Collectors and Government. However the correct particulars will be available only from the Ministry of Defence. Districtwise particulars are available with the Collectors and District Soldiers', Sailors' and Airmen's Boards also. A statement [a] giving the information so far as they are available with this Government is placed on the Table of the House.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** இந்தச் சைனு யுத்தத்திலும் பாகிஸ்தான் யுத்தத்திலும் காணுமல் போனவர்களின் எண்ணிக்கை ஜில்லாவாரியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சைனு யுத்தத்தில் காணுமல் போனவர்கள் 160 பேர்களும், பாகிஸ்தான் யுத்தத்தில் காணுமல் போனவர்கள் 39 பேர்களும் என்று இருக்கிறது. காணுமல் போனவர்களைத் திரும்பக் கண்டுபிடிப்பதற்கு இதுவரையில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றித் தனிக் கேள்வி கேட்டால் ராணுவ இலாகாவை விசாரித்துச் சொல்லலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாவட்டவாரியாக இவர்களுக்கு ஏதேனும் நஷ்ட ஈடு வழங்குவதற்கு அந்தந்த கலெக்டரிடம் ஏதாவது தொகை கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இவர்களுக்கு சில சலுகைகளும் வசதிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

---

[a] Printed as Appendix VI on pages 724–725.